ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1783/35 - 2012 නොවැම්බර් 09 වැනි සිකුරාදා - 2012.11.09
*1783/35 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டம்**

22அ ஆம் பிரிவின்படியான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 22அ பிரிவின்படி எனக்கு வழங்கப்பட்டுள்ள தற்றுணிபு அதிகாரங்களின்படி, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் இத்தால் உள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள இடப்பரப்பினை இச்சட்டத்தின் தேவைக்காக உரிமம்பெற்ற வலயம் ஒன்றாகப் பிரகடனப்படுத்துகிறேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

சனாதிபதி செயலகம்,
கொழும்பு,
2012, நவெம்பர் 08.

**அட்டவணை**

தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டம், அம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவின் மிரிஜ்ஜவெல, சித்தரக்கல, கரிவில மற்றும் பல்லேபெரகம கிராமங்களில் அமைந்துள்ளதும் தற்போது மிரிஜ்ஜவெல கைத்தொழில் பேட்டை என அழைக்கப்படுவதும் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் அஜித் ரஞ்ஜன் வீரசூரியவினால் 2012, ஒற்றோபர் 10 ஆந் திகதி வரையப்பட்ட 2850 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துரைக்கப்பட்ட தொடர்ச்சியான காணித்துண்டுகள் 1 முதல் 9 வரையிலான வெஹரலந்த, கொயம்கொலமுல்லபெத்த, பாலுகஹஹேனயாய, கலவிலபெத்த, மனஜ்ஜாவ சித்தரக்கல கொடி கெலே, மிரிஜ்ஜவெல கெலே மற்றும் லெவகொடல்ல, கப்புவத்த மற்றும் கரகன்லெவகொடல்ல என்றழைக்கப்படுவதும் ஐந்நூற்று அறுபத்தைந்து ஏக்கர், இரண்டு றூட்டுக்கள் பதினொன்று தசம் ஐந்து மூன்று பேர்ச்சஸ் (565ஏ. 2றூ. 11.53பே.) அல்லது இருநூற்று இருபத்தெட்டு தசம் எட்டு ஏழு எட்டு நான்கு ஹெக்டெயார் (228.8784 ஹெ.) பரப்பினை கொண்டதும் அத்துடன் பின்வருமாறு எல்லைகளைக் கொண்டதுமான சொல்லப்பட்ட காணித்துண்டுகள் 1 முதல் 9 வரை–

வடக்கில் – அம்பலந்தொட்டவில் இருந்து வரும் புதிய நெடுஞ்சாலை மற்றும் சூரியவெவவில் இருந்து மிரிஜ்ஜவில சந்தி வரையிலான மேட்டு வீதி ;

கிழக்கில் - சூரியவெவவில் இருந்து மிரிஜ்ஜவில சந்தி வரையிலான மேட்டு வீதி மற்றும் எவ்விபி 54 இல் உள்ள காணித்துண்டுகள் 171, 173, 174, 202, 333, 205-2/2, 498, 499 மற்றும் 548 மற்றும் எவ்விபி 54 இல் உள்ள காணித்துண்டுகள் 419 ;

தெற்கில் - எவ்விபி 54 இல் காணித்துண்டு 419, எவ்விபி 54 இல் உள்ள காணித்துண்டுகள் 166, 547 மற்றும் 218, எவ்விபி 66 இல் உள்ள பிற்சேர்க்கையான 10 மற்றும் 36 மற்றும்

மேற்கில் - எவ்விபி 66 சித்தரக்கல, எவ்விபி 54 இல் உள்ள காணித்துண்டுகள் 307-313, எவ்விபி 54 இன் 21 ஆவது பிற்சேர்க்கை, எவ்விபி 66 இன் 10 ஆவது பிற்சேர்க்கை, எவ்விபி 96 இன் காணித்துண்டு 614 இன் ஒரு பகுதி, எவ்விபி 66 இன் காணித்துண்டுகள் 508, 510 இன் பகுதி மற்றும் அம்பலந்தொட்டவில் இருந்து வரும் புதிய நெடுஞ்சாலை.

*11-902*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.